## ஆசிரியர் பேனாவில் இருந்து...


*அன்பின் வாசகர்களே,*

*நான் எதையும்; புதுமையாக எழுத விரும்புபவன். ஏற்கனவே விசித்திர உறவு> அழகு> முகங்கள் என மூன்று சிறுகதைத் தொகுப்புகளையும், "விடிவு இல்லம்"; என்ற நாவலையும் வெளியிட்டுள்ளேன். நான் ஒரு பௌதிகவியல் ;பட்டதாரியும்> தொலை தொடர்பு பொறியியலாளரும். இந்த **"காலம்" (Time)** என்ற சிறுகதைத் தொகுப்பு 16 அறிவியல் கதைகளை உள்ளடக்கியது. அறிவியல் கதைகளைப் புனைவதுக்கு ஆழமான கற்பனைதேவை. அறிவியலில் ஈடுபாடு இருக்கவேண்டும்*

*வாண்வெளியில் தினமும் இடம்பெறும் சம்பவங்கள் வியப்புக்குறியது. புதுப் புது கண்டுபிடிப்புகள்.'பிரபஞ்சம் தோன்றியது 15 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் என்கிறார் பிரபல விஞ்ஞானி ஸ்டீபன் ஹொகின்ஸ் (Prof Stephen Hawkins). பிரபஞ்சத்தில் சூரிய குடும்பம் பெரும் வெடிப்பினால் தோன்றி 4.6 பில்லியன் ஆண்டுகள் ஆகிறது. என்பது விஞ்ஞானிகள் கணிப்பு. நேரம் பிரபஞ்சத்தின் தோற்தின் போது ஆரம்பித்தது. நேரம் 5 பில்லியன் ஆண்டுகளுக்கு பின் முடிவடையும் என்கிறார்கள் பௌதிக விஞ்ஞானிகள். இதெல்லாம் ஒரு கணிப்பே. எப்போது என்பது நிட்சயமாக சொல்லமுடியாது. பெரும் வெடிப்பினால் சூரிய குடும்பம் தொன்றியது என்பது ஆராச்சியாளர்கள் கருத்து. அந்த குடும்பத்தில் பூமி ஒரு அங்கம். அது எவ்வளவுக்கு உண்மை என்பதற்கு போதுமான ஆதாரமில்லை. ஆனால் பல கிரகங்களையும் மில்கிவே (Milky Way) எனப்படும் பால் வழியையும் காலப்போக்கில் கண்டுவருகிறார்கள். பெரும் வெடிப்பின் போதும் வால்நடசத்திரத்தில் இருந்தும் தோன்றியவை தான் விண்கற்கள் என்ற இத்தொகுதியின் இரண்டாவது ;கதை. முதலாவது கதையான காலதத்தின தலைப்பை இச்சிறுகதை தொகுப்புக்கு வைத்துளளேன். உங்களுக்கு காலம் கிடைத்தால் வாசியுஙகள் சிநதியுங்கள். முடிநதால் கருத்து தெரிவியுங்கள். வாண்வெளியில் சூரிய> சந்திர கிரகணங்கள் > வால்நட்சத்திரங்கள், கரும் துளை, எரி கல் மழை> இப்படி எத்தனையோ சம்பவங்கள் நடக்கிறது. எங்கள் பூமியும் இச் சம்பவங்களின் பாதிப்புக்கு உற்பட்டது.*

*இத்தொகுப்பில் உள்ள கதைகள் பல விஞ்ஞான தத்துவங்களையும் ஆராச்சிகளையும் கருவாகக் கொண்டவை. இப்படியும் நடக்கலாம் என கற்பனை செய்து எழுதப்பட்டவை. காலம் சென்ற ஆர்தர் சி கிளார்க் பிரபல அறிவியல் கதைகள் பல எழுதியவர். செய்மதி வானில் மிதக்க முன்பே 1945 ஆம் ஆண்டில் தன் விஞ்ஞான நாவலொன்றில் அதைபற்றி எழுதியிருந்தார். ஒருவேலை விஸ்வாமித்திர மகாரிஷி உருவாக்கிய திரிசங்குவின் சொர்க்கம் என்ற கதையை அவர் வாசித்திருப்பாரோ என்னவோ.*

## *கதை 4 - வைரஸ் (Virus)*



*மார்க்கண்டனும் (மாரக்), ஜெயதேவியும (தேவி); ஆகிய இருவரும் கொம்பியூட்டர் சயன்ஸ் துறையில் பட்டம் பெற்றவர்கள். படிக்கும் போது இருவருக்குமிடையே பலத்த போட்டி. அதுவே அவர்களுக்கிடையே, காதலுக்கு வித்திட்டு, திருமணத்தில் முடிந்தது. வைத்திய துறை நிறுவனம் ஒன்றில் இரத்தபரிசோதனை செய்யும் பகுதியில் மார்க் புரோகிறாமராக வேலை செய்யத்தொடங்கினான். தேவி, பல்கலைகழகம் ஒன்றில் லெக்சரராக வேலை செய்தாள். திருமணமாகி இரு வருடத்தில் தம்பதிகளுக்கு இந்திரன் என்ற இந்திரஜித் பிறந்தான்*

*இந்திரன் பத்துவயதாக இருக்கும்போதே புரோகிறாம் எழுதுவதில் ஆர்வம் காட்டினானன். அதற்கு முக்கிய காரணம் அவனது பெற்றோர்கள். பெற்றறொர்கள் புரோகிறாம் எழுதுவதைக் கண்வெட்டாமல் இந்திரன் பார்த்துக் கொண்டிருப்பான். அவனுடைய நச்சரிபு தாஙகாலம் அவனக்கு புரோகிறாம் எழுதும் மொழிகளை சொல்லிக கொடுத்தார்கள். பல கேள்விகளை கேட்டு தன் சந்தேகததை நிவர்த்தி செய்வான். விi வில் மொழிகளை அவன் கற்றதை அவர்களால் நம்பமுடியவிலலை. தங்களைப்போல கணனித் துறையில் இந்திரன் படித்து பிரபலயமாக வேண்டும் என்பது அவனது பெற்றறொரின் ஆசை. அவர்களின் விருப்பத்தினபடி இந்திரன் கொம்பியூட்டர் சயன்ஸ் துறையில்; படித்து, முதலாம் வகுப்பில் பட்டம் பெற்றான்..*

*தன்னோடு ஒன்றாகப் படித்த நணபர்களான நந்தனும், தேவனும் அதிக சம்பளத்தில் பல சலுகைகளோடு அமெரிக்காவில் உள்ள பிரபல்யமான கணனி நிறுவனம் ஒன்றில் வெலை கிடைத்து இருவருடங்களுக்கு முன் சென்றது இந்திரனின் வாழக்;கையில் தனிமையைக் கொடுத்தது. தானும்; அமெரிக்கா போய் வேலை செய்து பிரபல்யமாக வேண்டும் என்ற ஆசை அவன் மனதில் படிப்படியாக*

வளரத்தொடங்கியது. தங்களின் ஒரே மகன் தங்களை பிரிந்து, பிறந்த நாட்டை விட்டு அமெரிக்கா போக நினைப்பது மார்க்கிற்கும், தேவிக்கும் விருப்பமில்லை.

“இந்திரா நீ கல்வி பயின்றது நீ பிறந்த நாட்டில். அதை மறக்காதே. உன் திறமையை; காலம் சென்ற விஞ்ஞானி அப்துல் கலாமைப் போல் நாட்டுக்கு உபயோகி. ” என்று அடிக்கடி மார்க் மகனுக்கு சொல்லுவார்.

இந்திரனுக்கு தான் எதையும் புதுமையாகச் செய்யவேண்டும், எவர்களாலும் தீரத்து வைக்க முடியாத பிரச்சளைக்கு திர்வு காண வேண்டும், அதன் மூலம் பலரின் கவனத்தை பெறவேண்டும் என்ற எண்ணம் கொண்டவன். அவன் ஒரு நிதி முதலீட்டு செய்யும் நிறுவனம் ஒன்றில் கணனி பகுதியில் வேலை கிடைத்து போன போது, அந்த நிறுவனம் வளருவதற்கு புது புது ப்ரோக்ராம்கள் அவசியம் என்பதை அறிந்தான். முதலீடு செய்த வாடிக்கையாளர்கள் தமது பங்கு விபரததையும், பங்கு விலையில் ஏற்படும் மாற்றங்களையும் ஆன்லைன்னில தகவல் தளத்தில் பார்த்து, தேர்ந்தெடுந்த நிறுவனங்களின பங்குகளில் முதலீடு செய்ய வீ்ரும்புவார்கள் என்பதை அவன் அறிந்தான். பலர் அதனால் பணக்காரர்களானார்கள்.

இந்தரனின் வேலைத்திறமையை அறிந்த அவனது மனேஜர் சுரேஷ் பல வருடஙகளாக அந்த நிறுவனத்தில் வேலை செய்பவர். நிறுவனத்தில் முதலீடு செய்த வாடிக்கையாளர்களின் பங்குகள் பற்றிய தகவல்களுக்கு, தகவற் தளத்தில் போதிய பாதுகாப்பு இல்லை என இந்திரன் பல தடவை சுரேசுக்கு எடுத்துச் சொன்னான். அதற்கான புரொகிராமை உருவாக்குவது அவசியம் என்று அவன் சொல்லியும் அதிக செலவாகும் என்பதாலும் அந்த புரோகிராமை உருவாக்க கொம்பியூட்டர் செக்கியூரிட்டி துறையில் அனுபவம் வாயந்த ஒருவர் தேவை என்று மனேஜர் சொன்ன பதில் இந்திரனை திருப்தி படுத்தவில்லை.

வாடிக்கையாளர்களின் முதலீட்டு தகவல்களின் பாதுகாப்பு பற்றிய தனது அக்கறையை தனது பெற்றோரிடம் கலந்து பெசினான். ஆதற்கு அவர்கள் “இந்திரா உனது அக்கறையை எழுத்து மூலம் உன மனேஜருக்கு அறிவித்துவிடு. ஆதைபற்றி அவர் முடிவு எடுக்கட்டும. உனக்கு உன் திறமையைக் வெளிக்காட்ட நிட்சயம் சந்தர்ப்பம் வரும்.” என்றார்கள்.

ஒரு நாள் நிறுவனத்தின் துணைத்தலைவர் உடனடியாக தன்னை வந்து இந்திரனை சந்திக்கும் படி சொன்னார் என்றார் மனேஜர் சுரேஷ்.

இந்திரனும் மனேஜரும்; துணைத்தலைவரைப் போய் சந்தித்த போது அவர் சொன்னதை கேட்டு இருவரும் அதிர்ச்சி அடைந்தனர்.

'' தலைவருக்கும,; எனக்கும் கவலையைக் கொடுக்கும் சில முறைப்பாடுகள் எமது நிறுவனத்தின் வாடிக்கையாளர்களிடம் இருந்து வந்திருக்கிறது. தங்களது முதலீட்டு தகவலகளை யாரோ ஒருவர் களவாடுகிறார் போல் தெரிகிறது. அதோடு முன்பு மாதிரி சரியான தகவல்களை ஒன் லைனில பெறமுடியாமல் இருக்கிறது என்பது தான் அவர்களின் முறைப்பாடு. நானும் உடனே ஒன்லைனில எனது பங்குகளின விபரத்தை தேடியபோது பிழையான தகவல் கிடைத்தது. நான் நினைக்கிறேன் யாரொ ஒருவர் எங்கள் கொம்பியுட்டரின பாதுகாப்பை மீறி வைரசை புகுத்தியிருக்கிறார்கள். இதற்கு எதாவது உடனடியாக செய்தாக வேண்டும். இல்லையேல் எங்கள் நிறுவனம் வெகுவாக பாதிப்படையும்'' கவலையொடு துணைத்தலைவர் சொன்னார். சுரேஷ், தணைத்தலைவர் சொன்னதைக் கேட்டவுடன் இந்திரனைப் பாரத்தார்.

''சேர் நான் இது எப்போதாவது ஒரு நாள் நடக்கும் என எதிர்பார்த்தனான். தகவற் தளத்தில் உள்ள வாடிக்கையாளர்களின் தகவல்களை பாதுகாப்பதற்க வேண்டிய புரோகிறாமை நான் நேற்று எழுதிமுடித்துவிட்டேன். அதை டெஸ்ட் செய்த பார்த்தால் தகவந் தளத்துக்குள் புகுந்த வைரஸை அழித்துவிடலாம். தகவற் தளத்தில் உள்ள வாடிக்கையாயளர்களின் தகவலகளுக்கு எது வித பாதிப்பும்; ஏற்படாது'' என்றான் இந்திரன்.

''அப்படியா? உடனடியாக நேரம் தாழ்த்தாது நீர் எழுதிய வைரஸை அழிக்கும் புரொகிறாமமை டெஸ்ட் செய்யும். அதற்கு நான் அனுமதி தருகிறேன். ஆனால் ஒன்று சொல்ல விரும்புகிறேன், இந்த விஷயம் எங்கள் மூவருக்குள் மட்டுமே இருக்கட்டும். பலருக்கு எமது கொம்பியூட்டர் அமைப்பின் தகவற் தளத்துக்குள் வைரஸ் புகுந்துவிட்டது என்று தெரிந்தால் எமது நிறுவனத்தின பெயர் கெட்டு விடும். வாடிக்கையாளர்கள் பதட்டப்படுவார்கள். நான் தலைவருக்கு தகுந்த நடவடிக்கை எடுக்கிறோம் என அறிவிக்கிறேன்; ''என்றார் துணைத்தலைவர்.

இவர்களின் சந்திப்பு நடந்து சில மணிநெரத்தில் தான் ஏற்கனவே எழுதிய வைரஸை அழித்து தகவல் தளததைப் பாதுகாக்கும் புரொகிறாமை கொம்பியூட்டரில் அப்லோட் எனப்படும் பதிவேற்றத்தை இந்திரன் செய்தான். தனது புராகிறாம் சரியாக வேலை செய்கிறதா என்று அறிய அதன் விளைவை டெஸ்ட் செய்தான்.

இந்திரனின் மனேஜர் சுரேசால் நம்பமுடியவில்லை. வைரஸ் அழிபட்டு விட்டது என்று மொனிட்டரில் பதில் வந்தது.

*“இந்திரா நீ உண்மையில் வெகு கெட்டிக்காரன். இந்த நிறுவனம் உனக்கு பதவி உயர்வு கொடுத்து சமபளத்தையும், சலுகைகளையும் கூட்டும் என்பது நிட்சயம்” என்றார் சுரேஷ்.*

*“நன்றி சேர். இந்த வெற்றியை எனது பெற்றோருக்கு நான் உடனடியாக அறிவிக்க வேண்டும்” என்றான் இந்திரன். அவள் சொல்லி வாய் மூட முன் அவனது மொபைல் போன் அடித்தது.*

*போனில் பதிவாகி இருந்த நம்பரைக் கண்டவுடன் வீட்டில் இருந்து தனக்கு கோல் வந்திருக்கிறது என்பதை இந்திரன் அறிந்தான்.*

*“யார் அம்மாவா பேசுகிறது’? இந்திரன் கேட்டான்*

*“ஓம் அம்மா தான். இந்திரா நீ உடனடியாக விஜயா ஹொஸ்பிடலுக்கு புறப்பட்டு வர முடியுமா? அப்பா தீவிர சிகிச்சை பிரிவில் அட்ம்மிட் ஆகியிருக்கிறார். அவர் நிலமை மோசமாயிருக்கிறது என்கிறார்கள் டாகடர்கள். அவரை ஒருகு வைரஸ் தொற்று நோய்; பாதித்திருக்கலாம்” தேவியின் குரல் தளும்பியது*

*இந்திரனுக்கு தன வெற்றியை அடுத்து ஒரு கவலைப்படும் செயதி வந்ததை நம்ப முடியவில்லை.*

*இந்திரனின முகத்தில் ஏற்பட்டதிடீர் சோகத்தைக் கண்ட சுரேஷ், “ என்ன இந்திரன் எதாவது பிரச்சனையா”? என்று கேட்டார்.*

*“ஓம் சேர். நான் உடனடியாக விஜயா ஹொஸ்பிடலுக்கு போகவேணும். அப்பாவுக்கு ஏதோ வைரஸ் இன்ஸ்பெக்சனாம்”.*

*“என்ன வைரஸா. என்ன சொல்லுகிறீர் ” சுரேஷ் பதட்டத்தோடு கேட்டார்*

*“ஆமாம் சேர் நான் இங்கை வைரஸை கொம்பியூட்டரிலை அழித்துவிட்டேன். டாக்டர்கள் உதவியோடு அப்பாவின் உடலில் உள்ள வைரஸ் இன்ஸ்பெக்சனை அழிக்க வேண்டும். கடவுள் தான துணைபுரிய வேண்டும்.;” என்றான் இந்திரன்.*

*“எப்படி அவருக்கு இன்ஸ்பெசன் வந்தது இநதிரன்”?;.*

*“அப்பா வேலை செய்வது இரத்தபரிசோதனை செய்யும் பகுதியில். அங்கிருந்துதான் வைரஸ் தொற்றியிருக்க வேண்டும் என நினைககிறேன்;”, என்றான் இந்திரன்.*

*“நீர் உடனே ஹொஸ்பிடலுக்குப் போய் அப்பாவின் நிலமையைப் பாரும். நான் நடந்ததை துணைத் தலைவருக்குச் சொல்லுகிறன்” என்றார் சுரேஷ்*

துறையில் பல ஆராச்சிகள் மூலம் கண்டு பிடிப்புகள் செய்து மருத்துவத் துறையில் பிரபல்யமாகி தன் மகன் பெயர்வாஙக வேண்டும் என்பது டாக்டர் சுப்பிரமணியம் கண்ட கனவு. அதையே பாக்கியமும் எதிர்பார்த்தாள். தன் ஒரே மகன் மேல் அவளுக்கு அளப்;பரிய பாசம். சகோதரங்கள் இல்லாத அவளுக்கு மகன் தான் எல்லாம். சுந்தரத்தி;ற்கு தந்தையை விட தாய் மேல் நம்பிக்கையும், அன்பும், நெருக்கமும்; அதிகம். தனது பிரச்சனைளுக்கு அவளிடம் ஆலோசனை கேட்பான்.

டாக்டர் பட்டம் பெற்று சில ஆண்டுகள்; கொழும்பு பெரிய வைத்தியசாலையில் வேலை பார்த்த பின்னர் கொழும்புக்கு அருகே உள்ள அங்கோடை மனநோய் வைத்தியசாலையில் வேலை பார்த்து, மன நோய்களுக்கு சிகிசசை செய்த அனுபவம் பெற்று பின்னர் மேற்படிப்புக்காக லண்டன்; சென்றவர் சுந்தரம்;. அங்குதான் மனநோயினை பற்றி கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் ஆராச்சிசெய்யும் போது வேதியலில் ஆராச்சியாளரான பயொ கெமிஸ்ட் சில்வியா என்ற இங்கிலாந்தைச் சேர்ந்த பெண்ணைச் அறிமுகம் கிடைத்தது. இருவருடைய தொழில்களும்; மருத்துவம் சம்பந்தப்பட்டபடியால் அவர்களுக்கிடையேலான சிந்தனைகள் ஒரே அலை நீளத்தில்; இருந்தன. அவர்களின் உரையாடல்களும் ஒத்துப்போயிற்று. கருத்துக்கள் ஒன்றானால் இனத்துக்கும் , நிறத்துக்கும், மதத்துக்கும் இடமில்லை என்பார்கள். முடிவு, இருவரும் காதலித்து திருமணம் செய்த கொண்டனர்.

டாக்டர் சுந்தரத்தின் தாய் பாக்கியம் மகன் டாகடரான ஒரு வுருடத்தக்குள் கணவனை இழந்தவள். சுந்தரம் படித்து டாக்டராவதற்கு அவளும் ஒரு முக்கிய காரணம். பாக்கியம் திருமணமான புதுதில் ஞாபக சக்தி மிக்கவள். சோல்லும் ஒரு ஒரு விஷயத்தையம் விரைவில் மறக்கமாட்டாள். கணவன் டாகடர் சுப்பிரமணியத்தாரின் நோயாளிகளை பற்றிய முழு விபரங்களையும் நினைவில் வைத்திரு;தாள். அதோடு மட்டுமல்ல செஸ் விi யாட்டை தன் மகன் சுந்தரத்தக்கு சொல்லிக் கொடுத்ததும் அவளே. அதோடுமட்டுமல்ல ஜோதிடத்தை தன் பெரியப்பாவின் உதவியோடு கற்றதினால் பல கலியாணப்; பொருத்தங்களைப் பார்த்து திருமணங்களை பணம் வாங்காது செய்து வைத்தவள். இவ்வளவு நல்லது செய்தும் பாவம் பாக்கியம், இறுதி காலத்தில் அல்செயமார் என்ற மறதி வியாதியால் வெகுவாகப் பாதிக்கப்பட்டாள். இவ்வியாதியானது ஒரு கணனியின் சிபியூ என்ற மையச் நெயலாக்கப்ப பகுதி செயற்;படாமல் போவதைப் போன்றது.

சுந்;தரம் -சில்வாவியா திருமணம் செய்தபோது பாக்கியத்துக்கு என்ன நடக்கிறது என்று புரியாத மன நிலை. அவளுக்கு இருந்த அல்செய்மார் வியாதி காரணத்தால் கொழும்பில் உள்ள "அமைதி" என்ற முதியோர் கவனிப்பு இல்லமொன்றில் ஒரு

நேர்சின் மேற்பார்வைக்குக்கீழ்; இருக்க சுந்தரம் தான் மேற்படிப்புக்கு கேம்பிரிட்ஜுக்கு போகமுன் ஒழுங்குகள் செய்திருந்தார். அதற்குத் தேவையான செலவையும் அவரே கவனித்துக் கொண்டார்.

சுந்தரத்தின் தாய் பாக்கியத்துக்க கணவனின் மறைவுக்கு பின் எழுபது வயதிலிருந்து டிமென்சியாவாக ஆரம்பித்து படிப்படியாக வளர்ந்து காலப்போக்கில் முற்றி அல்செய்மார் வியாதியாக மாறியது. தான் எதைச் செய்கிறோம் என்று தெரியாது அளவுக்கு மறதி வியாதியால் இறுதி காலத்தில் வாழ்ந்தாள். வயது வந்தவர்களுக்கு அனேகருக்கு தள்ளாத வயதில் அரளை வந்து விடும். பலருக்கு தங்கள் வாழ்க்கையில் நடந்தவை மறந்துவிடும். அவர்களுக்கே தெரியாது தாம் எதைப் பேசுகிறோம், செய்கிறோம் என்று. அவர்களது மூலைக்கும் நாவுக்கும் தொடர்பிருக்காது. அதனால் பேச்சு தடுமாறும். காரணமில்லாமல் பாக்கியம் பேசுவது பலருக்குப் புரியாது. எதையோ அர்த்தமில்லாது பேசுவாள். ஒரு காலத்தில் புத்தகங்கள் வாசிப்பதில் ஆர்வம் கொண்ட அவள் இவ்வியாதி வந்தபின்; புத்தகங்களையும் பேப்பர்களையும் கிழிப்பாள். இறுதி காலத்தில் தாயை பீடித்தது மூலை சம்பந்தப்பட்ட "அல்செய்மார்" நோய் என்று டாக்டர் சோமசுந்தரதுக்கு அறிநது கொள்ள வெகுகாலம் எடுக்கவில்லை. தன் தாயைப் போல் அல்செய்மார் நோயால் மனநிலை பாதிக்கப்பட்ட பல நோயாளிகளை அங்கோடை மனநோய் வைத்தியசாலையில் சந்தித்த அனுபவம் அவருக்கு இருந்தது.

பாக்கியம் தனது வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை மறந்தாள். தன் பெற்றோரினதும், கணவனது பெயர்களையும். தான் யார் என்பதையம், முற்றாக மறநது விட்டாள். எப்போதும் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் அலட்டிக் கொண்டே இருப்பாள். கிட்டத்துச் சொந்தக்காரர்களை கூட அடையாளம் காணமாட்டாள். அவள் என்ன சொல்லுகிறாள் என்று எவருக்கும் விளங்காது. மேசையில் எவருடைய பொருட்கள் இருந்தாலும் தன் அறைக்குள் எடுத்துக்கொண்டு போய்விடுவாள்.

ஒரு நாள் "அம்மா உங்கள் பெரியம்மா வந்திருக்கிறா பேசப்போறியளே ?" என்று மகன் சுந்தரம் கெட்டதுக்கு " நான் ஏற்கனவே பேசிவிட்டேன். திரும்பவும் பேசத் தேவையியில்லை" என்றாள் பாக்கியம். அவள் சொன்னது தனது பிம்பத்தை கண்ணாடியில் பார்த்து கதைத்;ததை நினைத்தே . தான் கதைப்பதை பார்த்து வேறு ஒருத்தி தன்னோடு கதைப்பதாக நினைப்பாள். அவ்வளவுக்கு புத்தி தடுமாற்ற நிலை. எதைச் சொன்னாலும் கேட்கமாட்டாள், காரணம் மற்றவர்கள் சொல்வதுவளுக்கு புரியாததே. தான் சொல்வது தான் சரி என்ற பிடிவாதக் குணம். அவள் மேல் பலருக்கு அனுதாபம். அவளோடு பேசாமல் இருப்பதுதான் நல்லது என்று அவளை ஒதுக்கி வைத்தார்கள். மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள் பாக்கியம். . இறுதிகாலத்தில்

*தாயின் நிலை டாக்டர் சுந்தரத்தை வெகுவாக பாதித்துவிட்டது. அங்கோடை வைத்திய சாலையில் தான் சந்தித்த மன நோயாளிகள்தான் அவரது நினைவுக்கு வந்தார்கள்.*

*தற்போது அல்செயமார் வியாதிக்கு தற்காலிகமாக நோய் வளர விடாமல் தடுக்கும் மருந்துகள் இருந்தாலும் முற்றாக நோயினை நீக்க மருந்து இல்லை என்பதையும் அறிந்தார் சுந்தரம். தொற்று நோய்கள் அல்செய்மார் வியாதியின் வளர்ச்சியை துரிதப்படு;த்தலாம் என்பது அவர் ஆராச்சிக் கட்டுரைகள் மூலம் வாசித்தறிந்தார். டிமென்சியா வந்த ஆரம்பக்கட்டத்தில் தாயுக்கு வந்த பொக்களிப்பான் என்ற சின்னம்மையும, மீசில்ஸ் என்ற தட்டம்மையும் அவளின் உடலை வெகுவாகப் பாதித்தனால் அவளுக்கு ஆரம்பத்தில் இருந்த டிமென்சியாவானது அல்செய்மார் வியாதியாக மாறியிருக்கலாம் என அவர்; நினைத்தது சரி என்பதை தனது ஆராச்சியின் போது அவர் அறிந்த உண்மை. சின்னம்மை நோய்; முதியோருககு வந்து அவர்கள் சரிவர கவனிக்கப்படாவிட்டால் அவர்களது மூலையை அந்நோய் பாதிக்கும் என்பதையும் அவர் அறிவார்.*

*தாயின் மரணம்; டாக்டர் சுந்தரத்தின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. அல்செய்மார் நோயுக்கு முடிவு காண புது மாற்று வைத்திய முறையை கண்டு படிக்க வேண்டும் என்று தீரமானித்தார். இனியாவது அந்நோயினால் வயது வந்த காலத்தில் பலர் கஷ்டப்படாமல் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாh ர். அந்த நோயைப்பற்றி பிற நாட்டு மூலை நோயியல் டாக்டரர்களின் ஆராச்சிக்கட்டுரைகள் பலதை வாசித்தார். அதற்கு ஒரு தீர்வு காணவேண்டும் என்ற ஆர்வம் அதிகமாயிற்று. அவர் அதிர்ஷடமோ எனவோ ஸ்டெம் செல் (ளுவநஅ ஊநடட) எனப்படும் முதல்நிலை உயிரணு பற்றி ஆராச்சி செய்ய ஸ்கொலர்சிப்பி;பில் கொம்பிரிடஜ் பல்கலைக்கழக மருத்துவ கல்லூரிக்குச் செல்லவேண்டிய சந்தர்ப்பம் கிடைத்தது. அதையே அவரது தந்தை டாகடர் சுப்பரமணயத்தினதம்; தாய் பாக்கியத்தினதும் விருப்பம் கூட.*

*அவருடை ஆராச்சிக்கு பயொ கெமிஸ்ட் ஆராச்சியில் ஈடுபட்ட சில்வியா பெரும் உதவியாக இருந்தாள.; . மூலையில் ஏற்படும்; பிலேக்ஸ் என்ற தட்டை வீக்கங்கள் அல்செய்மார் வியாதிக்குக் காரணமாகலாம் என்றும், அனால் அல்செய்மார் ஒரு தொற்றுவியாதியல்ல என்பதையும் நியூரோன் (நேரசயழளெ)இ என்ற நரம்பணுக்கோளோடும். முதல் நிலை உயரணுக்களோடும் சம்பந்தப்பட்டது என்பதையும் அவரால் அறிய முடிந்தது. புதிய நரம்பணுக்களை பாதிக்கப்பட்ட நரம்பணுக்களுக்கு முதல்நிலை உயரணு சிகிச்சை மூலம் புதுப்பித்தால் அல்செய்மார் வியாதிக்கு தீர்வு காணலாம் என்ற முடிவுக்கு வந்தார். இதற்கு அல்செய்மார் வியாதியால் இறந்த ஒருவரின் மூலையை தன் ஆராச்சி;;க்குப் பாவித்தார்.*

ஆராச்சியின் போது அல்செய்மார் நோய் உள்ள பதினைந்து நோயார்களுக்கு அவர்கள் குடுமடபத்தின் அனுமதியோடு புது முதல்நிலை உயரணுக்களை அவர்கள் மூலையில் மாற்றம் செய்து அதன் விளைவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் டாக்டர் சுந்தரம்.

"சில்வியா எனது ஆராச்சி வெற்றியடையும் என்று நினைகிறாயா?" மனைவி சில்வியாவை ஒரு நாள்; சுந்தரம் கேட்டார்.

"எனக்கு உங்கள் ஆராச்சி நிட்சயம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை உண்டு. பொசிட்டிவ்வாக இருங்கள். உங்கள் தாயைக் குணம் படுத்தி அவர் உயிகை; காப்பாற்ற உங்களால் முடியாமல் போய்விட்டதே என்று கவலைப்படாதீர்கள். இனியாவது பலரை அல்செயமார் வியாதியின் பாதிப்பில் இருந்து காப்பாற்றமுடியும் என்பதை எதிர்பாருங்கள்." என்றாள் சில்வியா

அவர் ஸ்டெம் செல் மாற்று மருத்துவம் செய்த பதினைந்து நோயளிகளை ஆறுமாதங்களாக அவதானித்து வந்ததில் அவர்கள் எல்லோருக்கும் மறதி நோய் படிப்படியாக குறையத் தொடங்கியது. அவர் எதிர்பார்த்த விளைவைக் கொடுத்தது மகிழ்ச்சியைக் கொடுத்தது. தாங்கள் யார் என்று அடையாளம் காணக்கூடியதாக அவர்கள் இருப்பதைக் கண்டாh ர். தனது ஆராச்சியானது வெற்றயடைவதறகான அறிகுறிகள் டாகடர் சுந்தரத்துக்கும்; அவர் மனைவி சில்வியாவுக்கும் தெரிந்தது.

காலப்போக்கில அமெரிக்காவில,; நியூயோர்க் நகரில் நடந்த மருத்துவர்கள் மகாநாட்டில் அல்செய்மார் வியாதியை முற்றாக நீக்குவதற்கான தனது ஆராச்சியின் முடிவை வெளிட்டார். தனது ஸ்டெம் செல்மாற்று சிகிச்சையால்;, தான் பரிசோதித்த பதினைந்து நோயாளிகளும் நூற்றுக்கு நூறு விகிதம் பயன் அடைந்தார்கள் என்ற புள்ளிவிபரத்தையும் சொன்னார.; ஒரு வருடத்துக்குள் அவர்களுக்கு இருந்த வியாதியில் ஏற்பட்ட மாற்றத்தை மகாநாட்டுக்கு வந்திருந்தோருக்கு விளக்கினார். சுகம் பெற்றவர்களை மகாநாட்டில் அறிமுகப்படுத்தி அவர்களோடு பேச வைத்து அவர்களுக்கு இருந்த வியாதியின் முன்னேற்றத்தைக் காட்டினார்

பல நாட்டு ஊடகங்களில் அச்செய்திக்கு கொட்டை எழுத்துகளில் முக்கியத்துவம் கொடுத்தது " அல்செய்மார் நோயை இல்;லாமல் செய்ய புது சிகிச்சை கண்டு பிடிப்பு" என்ற தலையங்கத்தோடு சுநதரத்தின பெயரையும் குறிப்பிட்டு செய்தி வந்தது. சுந்தரம் மனதுக்குள் தன்தாய் பாக்கியத்துக்கும் தந்தைக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்;.

# *கதை 12 - நுண்ணறிவு – IQ*




*" என்னடா உன் அப்பாவைப் போல புத்தியில்லாமல் பேசுகிறாய். எதையும் யோசித்து கதை." இது என் அம்மா எனக்கு அடிக்கடி சொல்லும் வசனம்.*

*என் அப்பாவின் குறைந்த புத்திசாலித்தனத்தை பற்றி என் அம்மாவுக்குத் தெரிந்திருந்தும் அவர் மேல ஒரு போதும் குறை சொல்லமாட்டாள். எப்படி இருந்தும் அவர், அவளின் கணவன் அல்லவா? என் அப்பாவின் செயல்பாடுகளுக்கு வழிகாட்டுபவள் புத்திசாலியான என் அம்மா. எது நடக்கப் போகிறது அதை முன்கூட்டியே கணிக்கக் கூடியவள். வரலாற்றுத் துறையில முதலாம் வகுப்பில தேறிய பட்டதாரி. அவள். சில காலம் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக வேலை செய்தவள். ஈP முத்து வரலாறு என்ற நூலை எழுதியவள். உலக வரலாற்றில் நடந்த முக்கிய சம்பவங்கள் எந்த ஆண்டு, எந்த மாதம் நடந்தது என்பதை நினைவில் வைத்திருப்பவள். என் பெற்றோர் குடும்பத்தைப் போல் என் குடும்பமும் அமைந்து விட்டது.*

*நான் ஒரு சாதாரண வர்த்தகன். முதிசமாக எனக்கு வந்து சேர்ந்த செல்வமும், என் மனைவி சரஸ்வதி கொண்டு வந்த சீதனமும் சேர்ந்ததால் எங்கள் குடும்பத்தில சௌகரியத்துக்கு குறைவில்லாத வாழ்வுக்கு பெரிதும் உதவியது. என் குடும்பத்தில் சில வருடங்களுக்குப் பின் பிறந்தவன் தயாநிதி. ஒரே பிள்ளை என்ற படியால் அவன் கேட்டதைக் கொடுத்தோம். அவனோடு விளையாட ஒரு சிறுவனை வேலைக்கு அமர்த்தினோம்.*

*அன்று என் மனைவி சரஸ்வதி என்றுமில்லாதவாறு கவலையோடு ஹாலில் எனக்காக காத்திருந்தாள்.*

*“ என்ன சரஸ் ஒருநாளும் இ p ல்லாதவாறு எல்லா வசதிகளும் இருநதும் எதற்காக கவலையாடு இருக்குறீர்? நீர் வேலை செய்யும் இடத்தில் எதும் பிரச்சனையா”? நான் என் மனைவியைக் கேட்டேன்.*

*“ சிவா எல்லா வசதிகளும் செல்வமும் இருந்தால் மட்டும் போதுமா, எங்கள் மகன் தயாநிதி; படித்து கல்விமானாக வேண்டாமா?” அவளிடமிருந்து நான் எதிர்பாராத பதில் வந்தது. அவளுக்கு தன் மகன் தன்னைப்போல படித்து பட்டதாரியாக வேண்டும் என்ற ஆசை இருப்பது எனக்குத் தெரியும்.*

*சரஸ்வதி மற்ற பெண்களைப் போல் இல்லாமல் சற்று மாறுபட்டவள். பெண்ணுரிமைக்காக போராடுபவள். அதனாலோ என்னவோ என்னை அத்தான்இ இஞ்சாருங்கோ அல்லது அப்பா என்று அழைக்காமல், சிவச்சநதரனான என்னை சுருக்கமாக சிவா என்று, திருமணமான முதல் கொண்டே அழைக்கத் தொடங்கினாள். கணவனை பெயர் சொல்லி அழைக்கும் பழக்கம் எங்கள் இனத்தவர்களிடையே இல்லாத பழக்கம். என் பெற்றோரும் தங்கள் மருமகள் என்னை சிவா என்ற அழைப்பதை விரும்பவில்லை என எனக்குத் தெரியும். ஆனால் நான் என் மனைவி என்னை அப்படி அழைத்ததை எதிர்க்கவில்லை. அதற்கு முக்கிய காரணம் அவளின் புத்திசாலிதனமும், அவள் வகித்த பதவியும். எனது ஏற்றுமதி பிஸ்னஸ் பிரபல்யமாக வளர்வதற்கு அவளே முக்கிய காணகர்த்தா. பிஸ்னசின் வரவு செலவுத் திட்டத்தை வருடா வருடம் தயாரித்து, மேற்பார்ப்பதும் அவளே. எனது புத்திசாலி தனத்துக்கும் அவளது நுண்ணறிவுககும் இடைவெளி அதிகம். என் தந்தை என் அம்மாவினதும் அவரின் ஊழியரகளின் புத்திசாலிதனத்தை நம்பியே வரத்தகம் செய்து, சொத்து சேர்த்தவர். அவரை புத்தசாலி என்று சொல்லமுடியாது. எனது மந்தக குணத்தைப் புரிந்தோ என்னவோ எனக்கு வரும் மனைவி புத்திசாலியாக இருக்கவேண்டும் என்று கணித பட்டதாரியான சரஸ்வதியை, படித்த குடும்பத்திலிருந்து தேர்ந்தெடுத்தார்.*

*சரஸ்வதியின் குடும்பத்தில் எல்லோரும் படித்து பட்டம் பெற்றவர்கள். சரஸ்வதியின் தந்தை அரச வருமான வரி இலாக்காவில் பிரதம கணக்காளராக இருந்து ரிட்டடையரானவர். தாய் ஒரு விஞ்ஞான ஆசிரியை. தமையன் பௌதிக பேராசிரியர். தங்கை சாவித்திரி ஒரு மூளை சம்டபநதப்பட்ட வியாதிகளுககுக கண்சல்டன் டாக்டர். சரஸ்வதியின் தம்பி சந்திரன் மாநிலத்தில் செஸ்போட்டியில் முதலாவதாக வந்தவன். பதின்ரெண்டாம் வகுப்பு படிக்கும் அவன் படிப்பில் கெட்டிக்காரன். பொறியியலாலனாக வரவேண்டும் என்பது அவன் நோக்கம். சரஸ்வதியின் பெற்றோர் குடும்பத்தோடு, என் பெற்றோர் குடும்பத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, தலை குனியும் நிலை என் பரம்பரைக்கு இருந்தது, செல்வம் இருந்தும் புத்திசாலித்தனம்; எனது*

*தந்தையிடமும் , பாட்டனாரிடமும் அவ்வளவுக்கு இருந்ததில்லை என்று அம்மா எனக்குச் சொல்வதுண்டு. அநத மந்தக்குணம் மரபணு வழிவந்ததாக இருந்திருக்கலாம். அந்த தாழ்வு மனப்பான்மையோடு வளர்ந்த என் முன்னேறத்துக்கு, துணைபோனவள் மிக புத்திசாலியான என் மனைவி சரஸ்வதி என்பது எனக்குத் தெரியும்.*

*ஒரு பிரபல முதலீட்டு நிறுவனத்தில கணக்கியலில் பல பட்டங்கள் பெற்றதால், பிரதம கணக்காளராக அவள் வேலை செய்தாள். அவளது புத்திசாலிதனத்தால் "ஸ்மார்ட் இன்வெஸ்டர்"" என்ற அந்த நிறுவனம் வெகு விரைவாக வளர்ந்து, வணிகத்தில் முதல் ஐந்து இடங்களில் உள்ள நிறுவனங்களில்; மூன்றாவது இடத்தைப் பிடித்தது. நிறுவனத்தில் முதலீடு செயத பங்குதாரர்கள் அவள் திறமையைக் கண்டு அவளை நிறுவனத்தின் உபதலைவராக நியமித்தனர். அது எனக்கும் என் பெற்றோருக்கும் பெருமையாக இருந்தது. எங்கள் வீட்டில் முக்கிய முடிவுகளை எடுப்பது அவளே. அதுவும் என்னை பெயர் சொல்லி அவள் அழைப்பதை என் பெற்றோர் எதிர்க்காதற்கு ஒரு முக்கிய காரணம். நானும் அதைப்பற்றி பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை.*

*தன்னைப் போல் தன் மகனும் புத்திசாலியாக வளர வேண்டும்; என்பது சரஸ்வதியின்; எதிர்பார்ப்பில்; தவறில்லை. அவனுக்கு; மந்தக் குணம் என்று தெரிந்தபடியால், அவளுக்கு தன் மகன் தயாநிதி என்னைப் போல் ஆகிவிடுவானோ என்ற பயம் இருந்து வந்தது.*

*தயாநிதியின் ஸ்கூல் ரிப்போர்ட் சரஸ்வதியின் கையில் இருந்ததை கண்டேன். எனக்கு ஓரளவுக்கு பிரச்சனை என்னவென்று புரிந்து விட்டது.*

*"என்ன சரஸ்வதி எப்படி தாயவின் ஸ்கூல் ரிப்போர்ட் இருக்குது"? நான் நேரடியாக அவளைக் கேட்டேன்.*

*"அதை ஏன் கேக்கறியல் சிவா. எல்லாப் பாடங்களிலும் நாற்பது மார்க்சுக்கு குறைவாகவே தாயா எடுத்திருக்கிறான். கணகில் இருபது, சயன்சில் இருபத்தைந்து, தமிழுக்கு முபத்திரண்டு. ஆங்கலத்துக்கு முப்பது. கிலாஸ் டீச்சர் எங்களை அவசியம் தன்னை வந்து சந்திக்கச் சொல்லி; நோட் அனுப்பியிருக்கிறா", கவலையொடு சரஸ்வதி சொன்னாள்.*

*" அப்படியா?. தயாவைச் சொல்லி குற்றமில்லை. பாவம் அவனால் முடிந்தது அவ்வளவு தான்." நான் என் மகனுக்காகப் பரிந்து சொன்னேன்.*

*"உங்களுக்க தெரியுமா பரீட்சைக்கு ஒரு கிழமைக்கு முதல் அவனுக்கு நான் வைத்த ஐகியூ டெஸ்டில் அவன் எடுத்த புள்ளிகள் 50. இது அவனது புத்திசாலித்தனத்தின் அடி மட்டமான நிலையை காட்டுகிறது. என் நிறுவனத்தில் எனனை வேலைக்கு*

இன்டரவியூ செய்த போது அவர்கள் வைத்த ஐகியூ டெஸ்டில் எனக்குக் கிடைத்தது 155 புள்ளிகள். புற ரபல விஞ்ஞானி அயன்ஸ்டைனின் ஐகியூ 170. இது நூற்றுக்கு ஒரு விகத்திலும் குறைந்தவர்களுக்கு மட்டுமே இருக்கும்''

'' சரஸ் உம்மோடு உம் மகனை ஒப்பிட்டுப்பார்க்க வேண்டாம். எல்லோரின் திறமைக்கும் ஒரு எல்லை உண்டு. அவனுக்கு சராசரி ஐகியூ லெவலான 100 இருந்தாலே போதுமானது''இ நான் மகனுக்காக பரிந்து சொன்னேன்.

'' சிவா நான் தயாநிதியின் நுண்ணறிவைப் பற்றி கொண்சல்டன் டாக்டராக இருக்கும் என் தங்கை சாவித்திரியிடம் ஆலோசனை கேட்டேன். எல்லாவற்றையும் கேட்டுவிட்டு அவள் சொன்னாளஇ; இது மரபணு தொடவுள்ள பிரச்சனையாக இருக்கலாம். அப்படி இருநதால் இப்போது செல் திரப்பி செய்து நிலமையை சிர்திருத்த வாயப்புண்டு;. அதைவிட பல வழிகளுண்டாம். மூளை ஒப்பிரேசன் செய்வதை தவிர்க்கட்டாம்..''

'' பழுதடைநத மரபணுக்களை புதிய நுண்ணறிவு திறன் அதிகமாயுள்ள ஒருவரின் மரபணுக்களினால் மாற்றினால் நுண்ணிறவு அதிகரிக்;கலாம் என்பதற்கான பரிசோதனைகள் செய்து வெற்றியும் கண்டார்களாம்'' அந்த மரபணு மாற்று சிகிச்சை அமெரிக்காவில் செய்து வெற்றி கண்டிருக்கிறார்களாம். அதற்கு பணம் அதிகம் செலவாகும்: நீங்கள் என் நினைக்கிறீரகள் சிவா'', சரஸ்வதி என் பதிலை எதிர்பார்த்தாள்.

'' இங்கைபாரும் சரஸ், இது போன்ற முக்கிய முடிவுகளை நீ எடுப்பது வழக்கம். மரபணுமாற்றத்தால் தயாவின் நுண்ணறிவில் முன்னேற்றம் இருக்குமாயின் எனக்கும் அந்த சிகிச்சையை தயாவுக்கு செய்வதறகு சம்மதம்'';. இதைப்பறிறி நான் என் பெற்றோரோடு பேசியபோது, அம்மாவுக்கு அந்த சிகிச்சை செய்வது சரியெனப் பட்டது'' என்றேன் நான ;

''எனது பேரன் ஒரு சாணக்கியனாக வரவேண்டும் என்று நான் எதிரபாரக்கவில்லை. ஓரளவுக்கு சராசரி நுண்ணறி ஈவு இருந்தால் அதுவே போதும்.'' என்றாள் அம்மா.

பல ஆயிரம் டாலர்கள் செலவு செய்து, மரபணு திரபி சிகிசசையை தயாவுக்கு செய்வதற்கு நியூயோரக்கில் உள்ள பிரபல்யமான மவுண்ட் சினாய் வைத்தியசாலைக்கு சரஸ்வதி அவனை அழைத்துச் சென்றாள். நானும் கூடவே சென்றேன்.

மவுணட் சினாய் வைத்திய சாலையில் பரிசோதனை செய்து பார்த்தபோது தயாவின் உயிரணுக்கள் முழுவதையும் மாற்றத் தேவையில்லை என்பதை அறிந்தார்கள். மரபணு சிகிச்சையை பாதிக்கபட்ட உயிரணுக்கள் திருத்தும் முயற்சியில டாகடர்கள்

*ஈடுபட்டனர். . நுண்ணறிவு கூடிய ஒருவரின் உயிரணுக்களை பாவித்து சிகிச்சை அளிக்பட்டது. சிகிச்சைக்கு பின் ஒரு மாதம் தயாநிதியில் ஏற்பட்ட மாற்றத்தை ஐகியூ டெஸ்ட்டுகள் செய்தபோது றுண்ணறிவு ஈவானது 110 க்கு உயர்ந்ததை டாகடர்களால் அவதானிகக் கூடியதாக இருந்தது. நல்லவேளை செய்த மறபணு சிகிச்சையினால் எதிர்பாரத்த மாற்றம் ஏற்பட்டது டாகடர்களுக்கு மகிழச்சியைக் கொடுத்தது. இச்சிச்சை எதிர்பாரத விளைவைக் கொடுகாதிருந்தால், அடுத்ததாக மூளை சிகிச்சை செய்யதிருக்க வேண்டிய நிலை ஏற்பட்;டிகலாம். ஆதனால்*

*உயிருக்கு ஆபத்தும் ஏறபட்டிருக்கலாம்.*

*சிகிசசை நடந்து ஊர் திரும்பிய பல மாதங்களுக்கு பின் தாயநிதியன் படிப்பில் மாற்த்தைக்கண்டு சரஸ்வதி மகழ்ச்சியடைந்தாள். வகுப்புற ல் எல்லாப்பாடஙகளிலும் எழுபதுக்கு மேல் புள்ளிகள் பெற்று மூன்றாம் மாணவன் ஆனான்.. தான எதிர்பார்த்த நுண்ணறிவு உள்ளவானாக தயா வளர்வதைக் கண்டு நானும் சரஸ்வதியும,; என் பெற்றோரும், சரஸ்வதியின் பெற்றோரும் பெரும் மகிழ்ச்சி அடைந்தோம்.*

*(யாவும் கற்பனையே)*

## *கதை 13 - மனஇறுக்கம் ( Autism)*



*நானும் என் கணவன் நாதனும் பார்காத சாத்திரக்காரர்கள் இல்லை. வேண்டாத தெய்வங்கள் இல்லை. சுற்றாத மரங்கள் இல்லை. எல்லாம் எதற்காக? எங்களுக்கு ஒரு ஆண்குழந்தை பிறக்க வேண்டும் என்ற வேண்டுதலுக்காகத் தான். என் வழியிலும், என் கணவர் வழியிலும் பிறந்தது எல்லாம் பெண்கள். எனக்கு நான்கு சகோதரிகள் மட்டுமே. நான் முத்தவள் அவருக்கு இரண்டு சகோதரிகள். அண்ணா அல்லது தம்பி என்று கூப்பிட அவரைத் தவிர வேறு ஆண்கள் அவர் கூட பிறக்கவில்லை. எனது மாமனாருக்கும், மாமியாருக்கும் கூட சகோதரன்கள் இல்லை. சகோதரிகள் மட்டுமே இருந்தார்கள். என் பெற்றோரும் என் மாமனார் குடும்பம்; தங்கள் பெண் பிள்ளைகளைக் கரை சேர்க்க எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்று எனக்கும், நாதனுக்கும் மட்டுமே தெரியும்.*

*எங்களுக்குப் பிறந்தது மூன்று பெண் குழந்தைகள். முத்தவள் கங்கா. வாக்குக் கண். யரை அவள் பார்க்கிறாள் என்று அறிவது கடினம் இரண்டாவது ஜமுனாவுக்கு. திக்குவாய். வார்த்தைகள் அவள் வாயில் இருந்து வெளி வர கஷ்டப்படும். மூன்றாவது சரஸ்வதி, உடற் பருமன் கூடியவள். யானை அசைவது போல் நடப்பாள். இப்படி முன்று பெண்களும் ஏதாவது ஒரு குறையோடு இருந்தாலும்; படிப்பில் மட்டும் கெட்டிக்காரர்கள். மூத்தவள் கணிதப் பட்டதாரி ஆசிரியை. இரண்டாமவள் பௌதிகவியல் பட்டதாரி. கடைசிப்பெண் சரஸ்வதி மருத்துவக் கல்லாரியில் முதலாவது ஆண்டு. சரஸ்வதிக்கு பியானோ வாசிப்பதில் ஆர்வம். அவள் ஆசைப்பட்டதால் செலவு பாராமல் ஒரு பியானொ வாங்கிக் கொடுத்தோம். நேரம் கிடைத்த போது பியானோவில் சினிமா பாடல்களை வாசிப்பாள்.*

நாங்கள் இல்லாத காலத்தில் மூன்று பெண்களும் தங்களைக் கவனித்துக் கொள்வார்கள் என்ற தைரியம் எங்களுக்கு இருந்தது. நான் நான்காவது தடவையாக, நாற்பத்தைந்து வயதில் கருவுற்ற போது என் மாமியார் எனக்கு சொன்ன வார்த்தைகள் என் காதில் இன்னும் ஒலித்தபடி இருந்தது.

''எடியே சுந்தரி இதொடு நிறுத்திக் கொள.; உனக்கு கிடைக்ப்போகிறது கடைசி குழந்தையாக இருக்கட்டும். இந்தக்; குழந்தையாவது ஆணாக பிறக்கட்டும். உங்களுக்கு கொள்ளி வைக்க ஒரு ஆண் வாரிசை ஆவது பெத்துவிடு''.

''மாமி நிட்சயம் இந்த முறை பிறக்கப்போவது ஆண் குழந்தை தான்'' நான் அவளுக்கு சிரித்தபடி சொன்னேன்.''

'' அதப்படி சுந்தரி சொல்லுறாய்''? மாமி கேட்டா.

'' நானும், அவரும் ஹொஸ்பிடலுக்குப்; போய், ஸ்கான் செய்து பார்த்து, ஆண் குழந்தை என்று உறுதிசெய்தாச்சு''.

'' அப்படியா. நல்ல செய்திதான். அவனை நல்லபடியாக வளர்த்து டாக்டருக்கோ அல்லது என்ஜினியருக்கோ படிப்பித்தவிடுங்கோ'', என்றாள் மாமி தன் மகனைப் பார்த்து.

'' என்ன பெயர் வைக்க யோசிச்சிருக்கிறியள்'? என்னை அப்பா கேட்டார்.

'' ஆதித்தியா என்று பெயர் வைக்க யோசித்திருக்கிறோம் அப்பா''.

'' நல்லபெயர் தான் அறிவில் சூரியனை போல் பிரகாசமாக அவன் வளரட்டும்'' என் அம்மா வாழ்த்தினாள்.

எங்கள் மகனின் வரவை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம.; என் மூன்று பெண்களுக்கும் தங்களுக்கு ஒரு தம்பி வரப்போகிறான் என்ற மட்டற்ற மகிழ்ச்சி.

நான் எதிரபார்க்காவாறு அவன் குறிப்பிட்ட காலத்துக்கு முதல், குறை மாதக் குழந்தையாக , எட்டு மாதத்திலேயே, திருகோண நட்சத்திரத்தில பிறந்தான் ;. ஏன் பிரசவம் முதல் மூன்று பிரசவங்களைப் போல் சுகப் பிரசவம் இல்லை.

''திருகோண நடசத்திரம் எனற படியால ஒரு கோணத்தை உன் மகன் ஆளுவான்'' என்றாள் அம்மா.

''அம்மா உன் வாக்கு பொன் வாக்காக இருக்கட்டும் '' என்றேன் நான்.

பிறந்ததும் ஆதித்தன் அழவில்லை. சில நிமிடங்களுக்கு பின்னரே அவன் அழுகைக் குரல் கேட்டது. என்னருகே அவன் படத்திருந்த போது திரும்பி அவனைப் பார்த்தேன். பெயருக்கு ஏற்ற பிரகாசமான முகம். நாதனைப்போல் கொழுத்த கன்னங்களும,; நிறமும். என்னைப்போன்ற அகண்ட விழிகள். தலை நிறைய கறுத்த மயிர். குழந்தையின் அங்க அசைவு சற்று குறைவாக எனக்குத் தெரி;ந்தது.

நாட்கள் போகப்போக அவன் வளர்ச்சியில் ஒரு வித வித்தியாசம் இருந்ததைக் கண்டேன். அவன் பார்வையில் ஒரு ஏக்கம் தெரிந்தது. அங்க அசைவுகளில் ஒரு சிறு நடுக்கம். அழுகையில் கூட தொடர்ச்சி இருக்கவில்லை. எதாவது பொம்மையை கையில் கொடுத்தால், உடனே அதை மற்ற குழந்தைகள் போல் ஆசையொடு வாங்கமாட்டான். போத்தலில் பால் கொடுக்கும் போது, உறிஞ்சிக் குடிக்கமாட்டான். அதிக நேரம் எடுக்கும். எனக்கும் நாதனுக்கும் அவன் வளரும் போது தாமதித்த அவனின் அங்க அசைவுகளை காணக்கூடியதாக இருந்தது. எனக்கு பிறக்கும் மகன் குறைவற்றவனாக பிறக்க வேண்டும் என நாம் இருவரும்; எதிர்பார்த்ததுபோல் என் மகன் இருக்கவில்லை என்பதை ஆதித்தனுக்கு இரண்டு வயதாக இருக்கும்போது கண்டோம். எதோ ஒரு கிரகணம் சூரியனை மறைத்து விட்டது போல் எனக்குப் பட்டது. என் அம்மாவும், அப்பாவும் ஆதித்தனின் போக்கில இருந்து, சாதாரணக் குழந்தை போல் அவன் இல்லை என்பதை கவனித்துவிட்டார்கள்.

''சுந்தரி, ஆதித்தனில் ஏதோ குறையிருக்கறது போல எனக்குத் தெரிகிறது.; ஆதித்தனை நீங்கள் அவசியம் டாக்டரிடம் கொண்டு போய் காட்டு. தாமதிக்காதே '' என்றாள் என் அம்மா. என் மாமியும் அவளோடு சேர்நது கொண்டாள்.

.''பரவாயில்லை அம்மா, அவன் வளர்ந்ததும்; அவனில் மாற்றம் ஏற்படலாம். அவனுக்கு ஒரு பிரச்சனயும் இல்ல. டாக்டரைப் போய் பார்க்க தேவையில்லை. பிறகு வெறு எதையும் பரிசோதனையில் கண்டு பிடித்து சொல்லக் கூடாததை டாக்டர் சொன்னால், எங்களால் தாங்கிக்கொள்ள முடியாது அம்மா. எங்களுக்கு இவன்தான் ஒரே மகன். இனி எனக்கு குழந்தைகள் வேண்டாம்''இ நான் உறுதியோடு அம்மாவுக்குச் சொன்னேன்.

வயது ஏற ஏற, அவனின் அட்டகாசம் கூடியது. வீட்டு மதிலிலும், தோட்டத்தில் இருந்த மரங்களிலும் ஏறத் தொடங்கினான். சோபாவில் ஏறி குதித்து விளையாடுவான். மேசையில் இருநத விலை உயர்ந்த கடிகாரத்தை புத்தகத்தை வீசி உடைத்துவிட்டான். நான் பொறுத்துக்கோண்டேன். எங்களுக்கு அவன் ஒரே மகன் அல்லவா?

சிலரின் ஆலோசனை படி, குழந்தைகளை பராமரிக்கும் இடத்தில் கொண்டு போய் சேர்த்தேன். மற்ற குழந்தைகளோடு ஆதித்தன் சேர்ந்து விளையாடினால், சில வேலை அவனில் மாற்றம் எற்படலாம் என்று நான் நினைத்தேன். அந்த நிலையத்தில் அவன் போய் சேர்ந்து ஒரு மாததுக்குள் எங்களுக்கு அவனைப்பற்றி; வந்த முறைபட்பாடுகள் பல.

''உங்கடை மகன் மற்ற பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடுகிறான் இல்லை. நாங்கள் சொல்வதை கேட்கிறான் இல்லை. அடம் பிடிக்கிறான். சில சமயம் மற்ற பிள்ளைகளைக் கிள்ளுகிறான். அவர்கள் அழுவதைப் பார்த்து கை தட்டிச் சிரிக்கிறான்.

உங்கடை மகனுக்கு "ஓட்டிசம்" என்ற மன இறுக்க நோய் இருக்கிறது போல் எனக்குத் தெரிகிறது. உங்கள் மகனை ஒரு மனநோய் ஸ்பெசலிஸ்ட்டிடம் கொண்டு போய் காட்டினால் நல்லது. அப்படி ஓட்டிசம் நோயாக இருந்தால் அதற்கான நிவாரணத்தை அவர் சொல்லலாம்"இ என்றாள் சிறுவர்களை பராமரிக்கும் நிலையத்தி;ன் தலமை ஆசிரியை. அவள் தனது அனுபவத்தை வைத்து சொன்னாள். மற்ற சிறுவர்கள் உங்கள் மகனோடு சேர்ந்து விளையாட பயப்படுகிறார்கள். சில சமயம் ஒருவரோடும் பேசாது ஒரு முலையில் போய் பேசாமல் அமர்ந்திருப்பான் உங்கள் மகன,; உணவு உண்ண அடம் பிடிப்பான்., இப்படி அவனைப் பற்றி பல தரப்பட்ட முறைப்பாடுகள்.

இறுதியில் நானும,; நாதனும் ஒரு பிரபல மனோவைத்தியரிடம் ஆதித்தனை கொண்டு பொய் கட்டினோம். டாக்டர் என்ன சொல்லப் பேகிறாரோ என்ற பயம் எங்களுககு; இருந்தது. ஆதித்தனுக்கு ஒரு பொம்மையை டாக்டர் கொடுத்தார்;. அவன் அதைவாங்;கி சுழட்டி எறிந்தான். சித்திரம் வரைய பேப்பரும் வர்ணப்பென்சில்களை டாக்டர் கொடுத் போது ஆதித்தன் அதை வாங்கி சுழட்டி எறிந்தான். பேப்பரில் சித்திரம் வரையாமல் தாறுமாறாக கிறுக்கி பேப்பரை கிழித்தெறிந்தான். டாக்டர் அவன் செயல்களை அவதானித்தவிட்டு ,என்னைப் பார்த்து.

"அம்மா இந்த சிறுவன் உங்கள் வயிற்றில் கருவாக இருக்கும் போது ஏதூவது பொக்களிப்பான, சின்ன முத்து போன்ற தொற்று நோயேதும் உங்களுக்கு வந்ததா"?

"இல்லை டாக்டர",; என்றேன்.

"எப்போதாவது நீஙகள் விழுந்து, பாரதூரமாக உங்கள் வயிற்றில் அடி ஏதம் பட்டதா"?

" இல்லையே டாக்டர்."

"உங்கள் அல்லது, உங்கள் கணவனின் பரம்பரையில் யாராவாத மனநோயால் பாதிக்கப்பட்டிருக் கிறார்களா".

"இல்வே இல்லை டாகடர்"

"நீங்கள் இச்சிறுவனை கருவில் வைத்திருக்கும் போது கொழுப்பு நிறைந்த மாமிசம் அதிகமாக உண்டீர்களா"?

"இல்லை டாக்டர். நாங்கள் வெஜிட்டேரியன்"

"உங்களுக்கு சர்க்கரை வியாதி உண்டா"?

"அதுவும் இல்லை டாக்டர்"

டாக்டர் சற்று நேரம் யோசித்தார். இன்னும் சில இரத்தப்;பரிசோதனை, பிரெயின் ஸ்கான் செய்த பின் என் முடிவை சில தினங்களில் சொல்லுகிறன் என்றார் டாகடர். அவர் எழுதிக் கொடுத்த பரிசோனைகள் எல்லாவற்றையும் ஆதித்தனுக்கு செய்தோம்.

அன்று வெள்ளிக்கழமை. ஆதித்தஆனாடு கோவிலுக்குப் போய் அவன் பெயரில் அரச்சனை செய்து வடுட திரும்பிய போது டாக்டரின் ஒபிசில் இருநது தன்னை வந்து சந்திக்கும் படி கோல வந்தது.

அவரை நாஙகள் இருவரும் போய் சந்தித்த போது அவர் சொன்னது எமக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

"மன்னிக்கவும.; உங்கள் மகனுக்கு மன இறுக்கம் என்ற ஓட்டிசம் (Autism) என்ற நோய் ஆரம்ப கட்டத்தில் இருக்கிறது. பலகுழந்தைகள் இந்த நோயால் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். கவலை வேண்டாம். சிலநேரம், காலம் போக உங்கடை மகனின் நிலமை மாறலாம். அவன் வாழும் சுழ்நிலையை பொறுத்தது. அவனோடு எதிர்த்து நிற்காதீர்கள். கண்டித்து பேசாதீரகள். பொறுமையாக, விடடுக்கோடுங்கள். அன்பாக இருஙகள். அவன் விரும்பியதை செய்யுங்கள். அவனில் சில வேலை மாற்றம் ஏற்படலாம். நல்லாக தூங்க விடுங்கள். மனதில் அமைதி ஏற்பட்டால், அதுவே உங்கள் மகனுக்கு இருக்கும் நோய் போக உதவும்,"

"மருந்து ஏதும் தேவையில்லையா டாக்டர்'? என் கணவர் கேட்டார்.

"இப்போதைக்கு தேவையில்லை. இயற்கை தான் மருந்து. கடவுளின் மேல் நம்பிக்கை வையுஙகள். என்னை மூன்று மாதங்களில் மகனோடு; வந்து பாருங்கள். திரும்பவும் பரிசோதித்து உங்கள் மகனில் மாற்றம் இருக்கிறதா என்று பார்க்கிறேன்".; என்றார் டாக்டர்.

நாங்கள் வீடு திரும்பியதும் டாக்டர் சொன்னதை என் மாமன் மாமியாருக்கும் என் பெற்றோருக்கும் சொன்னோம். ஏன் மூன்று மகள்மாரும் தங்கள் தம்பியின் நோய் தீர எங்களோடு ஒத்துழைப்பதாக சொன்னார்கள்.

ஆதித்தனை டாக்டர் பரிசொதித்த போது அவனுக்கு வயது ஏழு. காலில் சில சமயம் சப்பாத்துக்ளை மாற்றி போட்டபடி நடப்பான். லேஸ்; கட்டத் தெரியாது. யாராவது அவனுக்கு உதவ வேண்டும் ஆதித்தனின் சகோதரிகள் அவனின் செயல்களைப் பொறுமையோடு ஏற்றுக்;கொண்டனர்.

அன்று சமையல் செய்து கொண்டிருந்த என் காதில் ஒரு ஆங்கில இசை பியானொவில் கேட்டது. என்ன சரஸ்வதி புதுமையாக என்றுமில்லாதவாறு ஆங்கில டியூன் வாசிக்றாள் என நான் நினைத்தேன்.

"என்ன சரஸ்வதி புதுமையாக ஆங்கில டியூன் வாசிக்கிறாய்"? நான் என் கடைசி மகளைக் கேட்டேன்.

"அம்மா நான் இல்லை பியானோ வாசிக்கிறது. ஓடி வந்து இங்கை பாரேன் யார் பியானோ வாசிக்கிறது என்று"இ என்றாள் சரஸ்வதி.

நான் ஹாலுக்குப் போய் பார்த்த போது நான் கண்ட காட்சி என்னைத் திகைப்பில் ஆழ்த்தியது. அந்த பியானோ இசையைக் கேட்டு என் கணவரும் ஹாலுக்குள் வந்தார். பியானோவில் இசையை மீட்டியது வேறு யாரும் இல்லை, எங்கள் மகன் ஆதித்தன் தான். அவன் பார்வை முழுவதும் கீ போர்ட்டில் இருந்ததைக் கவனித்தோம்.

நடக்கும் அதிசயத்தால் நாம் இருவரும் உறைந்து போய் நின்றோம். ஆதித்தன் டியூனை வாசித்து முடித்து, ஒன்றுமே தெரியாதவன் போல் எழும்பிப்போய் சோபாவில் அமர்ந்தான். அவன் முகத்தில் அமைதி தெரிந்தது. நாங்கள் இருவரும் ஒன்றுமே பேசவில்லை. அவன் செயலைக் காணாதவர்கள் போல் இருந்தோம்.

''அம்மா தம்பி பியானோவில் வாசித்த டியூன் நான் ஒரு போதும் கேட்காத டியூன். இவன் பியானோ விளையாட எப்ப படித்தவன்'? சரஸ்வதி என்னைக் கேட்டாள்.

''எனக்குத் தெரியாது மகள். சில நேரம் நீ;P இல்லாத போது பியானோவை தட்டி;க கொண்டே இருப்பான். நான் தடுப்பதில்லை. நான் நினைக்கிறேன் இவனுக்கு நீ பியானோ வாசிப்பதைக் கண்டு தானும் வாசிக்க வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது போலத் தெரிகிறது. இந்த இசைமேல் ஆர்வம் கடவுள் கொடுத்த வரம் என்று நான் நினைக்கிறேன் சரஸ்வதி''.

நானும் நாதனும் கலந்து அலோசித்து அவனிடம் இருந்த இசைத் திறனை விருத்தி செய்வதால் அவனுக்கு இருக்கும் ஓட்டிசம் நோயை இல்லாமல் செய்து விடலாம் எனறு தீர்மானித்து ஒரு பியானோ டீச்சரை அவனுக்கு முறைப்படி பியானோ வாசிக்க ஒழுங்கு செய்தோம்.

டீச்சர் வந்து மூன்று நாட்களில் அவ சொன்னது எம்மை ஆச்சரியப்பட வைத்தது

''உங்கள் மகன் இந்த வயதில் ஒரு அதிசயத்தக்க திறமை உள்ளவன். இதைத் தான் புரொடிஜி என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். உங்கள் மகனுக்கு இசை தானாகவே வருகிறது. நான் அறியாத டியூன்களை எல்லாம் வாசிக்கிறான். இவனுக்கு பியோனோ டிரெயினிங் தேவையில்லை. அவன் போக்கில் வாசிக்க விடுங்கள்''இ என்றாள் பியானோ டிச்சர்.

ஆதித்தனில் ஏற்பட்ட தீடிர் மாற்றததைப் பற்றி டாக்டருக்கு சொன்னோம்..

''நீங்கள் சொல்வதை கேட்க எனக்கு சந்தோஷமாக இருக்கு. உங்கள் மகன் ஒரு புரொடிஜி போல் எனக்குத் தெரிகிறது. நான் அறிந்த பல புரொடிஜிகளுக் ஓட்டிசம் இருந்ததாக கேள்விப்பட்டேன். இது மரபணுவோடு தொடர்புள்ளதாக இருக்கலாம்.. மோர்சாட் என்ற இசை மேதை ஐந்து வயதில்; இசை அமைக்கத் தொடங்கினவர். பேத்தோவனும் அப்படியே. யார் கண்டது ஆதவனும் வருங்காலத்தில் ஒரு இசை மேதை ஆகலாம். இசையில் இருந்து வெளியாகும் ஒலி அலைகளின் அதிர்வுகள்;, சக்தி வாயந்தவை. அதனால் தான் பிராமணர்கள் கோவிலில் மந்திரம் சொல்லும் போது

## *கதை 14 - தோட்டா*



*கல்விச் சேவையில் புகுத்தப்பட்ட தரப்படுத்தல் சட்டத்தின் மூலம் ஈழத்தில் பாதிப்படைந்த புத்திசாலி மாணவர்கள் பலர். அரசுக்கு திறமையான மனிதவளத்தைத் தன் இனவேற்றுமை சட்டத்தினால் இழந்ததை பற்றி கவலை இருந்ததாகத் தெரியவில்லை. அரசின் முழு நோக்கமும் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்று, நாட்டை ஆளுவதே. இச்சட்டத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பலர் விடுதலைப் போராளிகளானார்கள். பண வசதி படைத்த சில மாணவர்கள்; பாதுகாப்பு தேடி, தம் வருங்காலம் நல்லதாக அமைய வேண்டும் என்ற நோக்கத்தோடு பிற நாடுகளுக்கு புலம் பெயர்ந்தார்கள். தம் அறிவைப் பயன்படுத்தி புதியதை கண்டுபிடிக்க வேண்டும், வி;ஞ்ஞானியாகி தங்களின் தமிழ் சமூகத்துக்க உதவவேண்டும் என்ற நோக்கம் கொண்ட இரு மாணவர்கள் பற்றிய கற்பனைக் கதை இது.*

*சங்கரும், சீலனும் இராசாயனவியல் ஆசிரியர் மகாலிங்கத்தின் இரு மகன்கள். இவர்களில் மூத்தவன் மாதவன் அவன்ற ன் தம்பி சீலன்; இரு வருடங்களால்; இளமை. படித்தவர்கள் வாழும் ஊரான பருத்தித்துறையில பிறந்தவர்கள். மகாலிங்கம் மாஸ்டர் பருத்தித்துறை ஹார்ட்டிலி கல்லூரியில் உயர் வகுப்புகளுக்கு இரசாயனப் பாடம் கற்பிக்கும் பிரபல்யமான ஆசிரியர். அக்கல்லூரி பல அறிஞர்களையும் விஞ்ஞானிகளையும் உருவாக்கியுள்ளது. மகாலிங்கத்தின்; மனைவி இந்துமதி ஒரு கணித ஆசிரியை. பருத்தித்துறை மெதடிஸ்ட் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கணித ஆசிரியையாக வேலை செய்பவள்.*

*சங்கரும், சீலனும் வீட்டில் வைத்து பரிசோதனைகள் செய்வதில் ஆர்வம் காட்டிவந்தார்கள். அவர்களை ஊக்கப்படுத்த அவர்கள் இருவரினதம் வேண்டுகோளுக்கு இணங்கி பரிசோதனைகள் நடத்துவதற்கு வீட்டில் தனி அறையொன்று பெற்றோரால்*

ஒதுக்;கப்பட்டது. இரசயானப்; பொருட்களை வாங்குவதற்கு தேவையான பணத்தை, இங்கிலாந்தில் இரசாயனப் பொறியியலாராக வேலை செய்யும் தாய்மாமன்; அனுப்பி வந்தார்.

சங்கர், சீலனோடு ஒன்றாகப் படித்தவர்கள் ஜெயமும் ரவியும். பால்ய நண்பர்கள். உறவினர்கள் கூட. அவர்கள் இருவரும் பிரபல்யமான பிஸ்னஸ்மன் கணேசலிங்கத்தின் மகன்கள். படிப்பில் சங்கரையும் சீலனையும் போல் கெட்டிக்காரரர்களாக இல்லாவிட்டாலும,; அவர்கள்; தந்தையைப்போல் வணிகத்தில் அதிகம் ஆர்வம் உள்ளவர்கள். பணவசதி இருந்ததால் படிப்பை இலங்கையில் தொடராமல் கனடாவுக்கு புலம் பெயர்ந்தார்கள். கனடா சென்ற ஜெயமும் ரவியும், ரியல் எஸ்டேட் ஏஜண்டுகளாகி, பிரபல்யமடைந்தார்கள் , தங்களின் பால்ய நண்பர்களான சங்கரையும் , சீலனையும் கனடாவுக்கு வரும்படி அவர்கள் பலதடவை அழைத்தும், பிறந்த மண்ணை விட்டு வரமுடியாது என்று அவர்கள் மறுத்துவிட்டார்கள். அவர்களின் நோக்கம் வேறு.

வன்னி காட்டுப் பகுதியில் ஒரு பாரிசோதனை கூடம் அமைத்து இருவரும் தமிழ் ஈழ விடுதலைப் போருக்கு தம் அறிவைப் பயன் படுத்த தீர்மானித்தார்கள். தங்கள் நோக்கத்தை; நண்பர்களான ஜெயத்துக்கும் ரவிக்கும் அறிவித்தார்கள்.

''உங்கள் பரிசோதனைக்கு தேவையான நிதி உதவி செய்ய நாங்கள் தயார். உங்கள் ஆராச்சி வெற்றி பெற எங்கள் வாழ்த்துக்கள். ஆனால் ஒன்று. நாம் உங்கள் பரிசோதனைக்கு நிதி உதவி செய்யும் விஷயம் எங்களுக்குள் மட்டுமே இரகசியமாக இருக்கட்டும். எங்கள் தந்தையாருக்கும் தெரியக் கூடாது'' என்று கனடா வாழ் நண்பர்கள் இருவரிடம் இருந்து பதில் வந்தது.

பரிசோதனைக்குத் தேவப்பட்ட இராசயனப் பொருட்களையும் கருவிகளையும் பிறநாட்டில் இருந்து வாங்குவதற்கு தேவையான நிதி உதவியையும,; ஒழுங்குகளையும் ஜெயமும் ரவியிம், செய்தார்கள்.

சங்கரும், சீலனும் 48 மணித்தியாலங்களுக்கு உறைய வைக்கும் துப்பாக்கி தோட்டாக்களை தம் ஆராச்சி மூலம் கண்டுபடித்தனர். ஆரம்பத்தில், வன்னி காட்டில் உள்ள சில மிருகங்களில் பரிசோதனை செய்து, முழு வெற்றி கண்டார்கள். போராட்டத்தை நடத்தும் தலைவரிடம் தங்கள் கண்டு பிடிப்பைப் பற்றி எடுத்து சொன்னார்கள். அவர்களுடைய கண்டுபிடிப்பை தலைவர் முதலில் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

''உங்கள் பரிசோதனையின் வெற்றியைப் பாராட்டுகிறேன். ஆனால் நாம் இந்த உறைய வைக்கும் தோட்டாக்களை பாவிப்பதை ஊடகங்கள் அறிந்தால் நாங்கள் இராசாயன ஆயுதம் பாவிக்கிறோம் என்று எம் மேல் குற்றம் சாட்டுவார்கள். அதோடு மட்டுமல்ல இரசாயன ஆயுதங்களை போரில் பாவிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

*ஆதனால் நாம் இந்த தோட்டாக்களை பாவிப்பதை தவிர்க்கவேண்டும்'' என்று சொன்னார்.*

*" இது 1988 இல் குர்திஷ் மகள் மேல் சதாம் ஹ_செயின் பாவித்த கடுகுவாயு போன்ற இரசாயன ஆயுதம் போல் அல்ல இது. நேருக்கு நேர் எதிரிகளோடு துப்பாக்கி, பாவித்து சுடும் போது மட்டுமே இத் தோட்டாக்களை பாவித்து, 48 மணித்தியாலங்களுக்கு எதிரிகளை செயல் பட முடியாமல் உறைய வைக்கலாம்.; உறைந்த எதிரிகளை இலகுவில் சிறைபிடித்து போர்க் கைதிகளாக்கலாம். சிறைபிடித்தவர்களை வைத்து அரசாங்கத்தோடு பேரம் பேசி, எமக்கு வேண்டியதைப் பெறலாம். இந்த தோட்டாக்களை பாவிப்பதால் எதிரிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படாது. பொது மக்களையும் பாதிக்காது என சங்கரும்; சீலனும் தலைவருக்கு விளக்கம் கொடுத்தார்கள். அரை மனதோடு அவர் சம்மதித்தார்.*

*யானையிறவு போர்க்களத்தில் இவர்கள் கண்டு பிடித்த தோட்டாக்கள் நூற்றுக் கணக்கான எதிரிகளை இலகுவாக போர்க் கைதிகளாக உயிரோடு சிறைபிடிக்க உதவியது. இனிவரும் போர்களிலும் அந்த உறைய வைக்கும் தோட்டக்களை 72 மணித்தியாலங்களுக்கு நீண்ட நேரம் உறையவைக்கும் வகையில் பரிசொதனைகள் மூலம் தயாரிக்க முடியுமா என்ற ஆராச்சியைத் தொடர முடிவு எடுக்கப்பட்டது.*

*போரின் உச்சக் கட்டத்தின் போது சங்கர் , சீலன் பரிசோதனை சாலையைப்பற்றிய விபரம் எதிரிகளுக்கு இனத் துரொகிகள் அறிவி;த்ததால் பரிசோதனைச் சாலை குண்டு தாக்குதலுக்கு உற்பட்டு அழிந்தது. அத்தாக்குதலினால் பரிசோதனை சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எரிநது சாம்பலாயிற்று. சங்கரும்; . சீலனும் மரணத்தைத் தழுவினார்கள். தமிழ் ஈழம் சிறந்த விஞ்ஞானிகளை இழந்தது.*

*(யாவும் கற்பனையே)*

# *கதை 16 - அமரத்துவம் ( Immortality)*




*லோகநாதன் சிறுவயது முதற்கொண்டே அறிவியல் துறையில் அதிக ஆர்வமுள்ளவன்;. லோநாதனின் தந்தை சிவநாதன்,; பௌதிகத்துறை பேராசிரியராக இருந்து 55 வயதில் காலமானவர். அவரின் துனைவி பார்வதி, உயிரியல் துறையில் பேராசிரியையாக இருந்து ஐம்பது வயதில் மார்பு புற்று நோய் காரணமாக இறந்தவள். இவர்களுக்குப் பிறந்த இரு ஆண் குழந்தைகளில் மூத்தவன் லோகநாதன். பயோ கெமிஸ்டிரி துறையில் பட்டம் பெற்று உயிரி வேதியியலில் பல ஆய்வுகளை கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் நடத்தி வருபவன். அவனது திறமை அறிந்த அவனது புரோபெசர் வில்லியம், அவன் வருங்காலத்தில புதிய கண்டுபடிப்புகளை; செய்து மனித இனத்துக்குப் பேருதவி செய்வான் என்று சக பேராசிரியர்களிடம் அடிக்கடி சொல்லுவார்.*

*கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக ஆய்வு கூடத்தில்; மரபபணு சிகிச்சை மூலம் மனிதனின் ஆயுள் காலத்தை நீடிக்க முடியமா என்பதில் ஆராய்ச்சி நடத்தி வந்தான் லோகநாதன். அவ் ஆராய்ச்சியில் அவன் முக்கிய சிரத்தை எடுதத்துக்கு காரணம், அவனது பெற்றோர்கள் குறைந்த வயதில் மரணித்ததே. அவனது பெற்றோரின்; பரம்பரையைச் சார்ந்தவர்கள், குறைந்த காலம் வாழ்ந்வர்கள்.. அதனால் அவனது பரம்பரையைச் சார்ந்தவர்களின் மரபணுக்கள் வெகு விரைவில் சிதைந்ததால் அவர்களின் ஆயுற் காலாங்கள் குறைவாக இருந்திருக்கலாம்; என்று லோகநாதனுக்கு புரொபெசர் வில்லியம் சொன்னதை அவன் அடிக்கடி நினவு படுத்திக்கொள்வான். தனக்கும் அவர்களைப் போல் ஆயுள்காலம் குறைவாக இருக்கலாமோ என்று அவன்ற ன் புரெபசரிடம் கேட்ட போது அதற்கு அவர்,*

*"லோகா, உன் ஆயுளைப் பற்றி இப்ப யோசிக்காதே. வெகு விரைவில் ஆயுளை நீடித்து, நுண்ணறிவு கூடிய டொல்பின்கனைப் போல் 150 வருடங்கள் மனிதன்*

*வாழக்கூடிய வழியை நீ கண்டு பிடித்து விடுவாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு" என்றார்.*

*லோகனாதனுக்கு ஆராய்ச்;சியில் துணையாக இருந்து, பின் துணைவியானவள் மேரி இசபெலா. அவளுடைய தந்தையும் வேதியியல் துறையில், லண்டன் பல் கலைக்கழகத்தில் பேராசிரியாரக இருந்து ரிட்டடையராகி, அறுபது வயதில் ஹார்ட் அட்டாக்கால் காலமானவர். அவரின் மனைவியும் இளமை வயதில் மார்பு புற்று நோயால் காலமானவள். பெற்றோர் இளம் வயதில் மரணித்தது மேரியை வேகுவாக பாதித்தது. லோகநாதனிதும், மேரியினதும பரம்பரையைச் சார்ந்தவர்கள் குறைந்த ஆயுள் உள்ளவர்களாக வாழ்ந்ததால், மனிதனின் ஆயுளை அதிகரிக்க "ஜீன் திரபி" (புநடுந வ்h நசயிh ல) எனும் மரபணு சிகிச்சை பற்றிய ஆராய்ச்சியே அவர்களின் இருவரினதும் குறிக்கோள்.*

*" லோகா, நீர் இந்தியாவைச சேர்ந்தபடியால் ஜாதகத்தின் மேல் அதிகம் நம்பிக்கை உள்ளவரா"? வில்லியம் கேட்டார்*

*" ஏன் சேர் அப்படி கேட்கிறியள்"?*

*" இல்லை, இங்கு கணித பேராசிரியராக இருக்கும் சுப்பிரமணியன் ஜாதகப் பொருத்தம் பார்த்துத்தான் தன் சாதிக்குள் திருமணம் செய்ததாக எனக்குச் சொன்னார். அந்தப்பொருத்தத்தில் தாலிப் பொருத்தம், ஆயுள் போருத்தம் , மனப் பொருத்தம், பிள்ளைப் பொருத்தம்; ஆகியவையை முக்கியமாக பார்த்து தன் பெற்றோர் தனக்குத் திருமணம் செய்து வைத்ததாக எனக்குச் சொன்னார். ஆதனால் தான் கேட்டேன்."*

*"இருக்கலாம் சேர். அப்படி பொருத்தம் பார்த்து திருமணம் செய்தவர்கள் கூட வெகு விரைவில் பிரிந்து இருக்கிறார்கள். இறந்தும் இருக்கிறார்கள். மேலைத் தேசங்களில் ஜாதம் பார்பதில்லையே, ஆனால் திருமணத்துக்கு முன் பிளட் டெஸ்ட் செய்வதாக கேள்வி".*

*" உண்மைதான் உலகில் ஆயுள் கூடிய மக்கள் வாழும் தேசங்களில் மொனொக்கோ (ஆழழெஉழ) முதலிடத்தில் இருக்கிறது. பல பில்லியனியர்கள் இத்தேசத்தில் வாழ்கிறார்கள். அதற்கு அடுத்த ஆயள் கூடிய மக்கள் வாழும் நாடு ஜப்பான். ஆனால் ஆகஸ்ட் 1945 இல் அமெரிக்கா வீசிய அனுக்குண்டால் குறைந்த ஆயுளோடு போனவர்கள் பல்லாயிரக கணக்கான ஜப்பானியர்கள்;. ஆயுள் அதிகமுள்ள மக்களைக் கொண்ட மூன்றாவது நாடாக ஹொங்கொங்."*

*"கேட்க ஆச்சரியமாக இருக்கிறது. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து போன்ற தேசங்களில் வாழும் மக்களின் சராசரி ஆயட்காலம், பல இடங்கள் கீழே உள்ளது . இதோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்தியா, பாக்கிஸ்தான், பங்களாதேஷ, தென்*

கிழக்கு ஆசிய நாடுகளில் வாழும் மக்களின் சராசரி ஆயுள் குறைவு. இதற்கு வறுமையம், பொருளாதாரமும் காரணமாக இருக்கலாம்'', லோகநாதன் சொன்னார்.

'' மனிதனின் ஆயுளை அதிகரிக்கும் ஆராயச்சி நல்லுது தாh ன், ஆனால் எதிர்பாராத விதமாக ஏற்படும் மரணம் தவிரக்க முடியாதது ஒன்று. உதாரணத்துக்குப் விபத்து, போர் , பூகம்பம், சூறாவளி, சுனாமி, போன்றவையால் ஏற்படும் மரணம் தவிர்க்க முடியாதவை''இ புரொபெசர் சொன்னார்.

'' எதற்காக வெகுவிரைவில் மனிதனுக்கு வயது அதகரிக்கும் போது, தோல்கள் சுருங்கி, நடக்கும் சக்தி இழந்து, பல வித நோய்கள் வந்து உறவு கொண்டாடுகிறது என்பதைப் பற்றியே நான் ஆராய்ச்சி செய்து வருகிறேன். அதிபுத்திசாலியான டொல்பினைப் பாருங்கள். அது சுமார் 150 முதல் 200 வயது வரை வாழ்கிறது. ஆமை, 400 வயது வரை வாழ்கிறது. ஏன் யானை கூட 90 வருடங்கள் வரை வாழ்கிறது. ஆனால் மற்றைய உயரினங்களை அடக்கி ஆட்சி செய்யும் மனிதன் மட்டும்; சராசரி 70 ஆண்டுகளே வாழ்கிறான்'', லோகநாதன் சொன்னார்.

''வயதாகும் போது நமது உடலில் உள்ள மரபணுக்களும் செல்களும் படிப்படியாக சிதைவதால் செயல் குறைந்து நோய்களை எதிர்க்கும் சக்தியை இழந்து விடுகிறது. அதனால் டயபடீஸ், கிட்னி வியாதி, அல்செய்மார். புற்ற நோய், இருதைய நோய் போன்றவை உடலில் சேர்ந்துவிடுகிறது. ஆனால் மரபணுக்களும்;, செல் எனபபபடும் கலங்கள்; வேகமாக சிதையாமல் இருக்க வழிவகைகள் உண்டு சேர். சிதைவை குறைத்;தால் நோய்கள் வராமல் இருக்கமுடியும். அதனால் ஆயுளும் நீளலாம்.''இ மேரி கருத்து தெரிவித்தாள்.

'' மேரி நீர் சொல்வதில் ஓரளவுக்கு உண்மையிருக்கிறது. ஆனால் செல்கள் சிதையாமல் இருக்கும் சிகிச்சையை வெகு இலகுவாக செய்யமுடியாது என நான் நினைக்கிறேன்''இ வில்லியம் சொன்னார்..

'' சேர், செல்லின் வளர் சிதைவு பிரச்சனை உருவாக்கலாம். எமது செல்கள் கழிவுப்பொருட்களை சேகரிக்கிறது. இதனால் உயிரியல் செயல்முறைகள் சீரகுலைந்து போய்விடுகிறது.'' லோகநாதன் சொன்னார்.

''லோகா. ஒன்றை நீர் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இறுதியாக, உடல் உறுப்புகள் மறு உருவாக்கம் பிரச்சினைகளை எதிர்கொண்டால் ஒவ்வொரு குரோமோசோமினில் இருக்கும் டெலிமெரஸ் எனும் மரபணுக்கள் கலங்கள் பிரியும்போது சுருங்கிக் கொண்டு போகிறது. இந்த சுருக்கத்தை தவிரக்காவிடில் செல்கள் செயல் இழந்து விடுகிறது. ஒரு கட்டத்தில செல்கள் இறுந்து விடுகின்றன. அதனால் பல்வேறு நோய்கள் உடலைப் பாதித்து மரணத்தைக் கொண்டுவரலாம்.

இதை நீங்கள் கவனத்தில் கொண்டு ஆராய்ச்சியை நடத்தவேண்டும்;'' பேராசிரியர் வில்லியம், லோகனாதனுக்கும் . மேரிக்கும் அறிவுரை வழங்கினார்,

''சேர் உதாரணமாக, ஒரு பொதுவான நீரிழிவுக்கு எடுக்கும் மெட்ஃபோர்மின் மருந்தை, பொறுத்தவரை, எலிகளில் செல்களின சிதைவு மெதுவாக நடக்கிறத. ஆதகால கூடிய காலம் வாழக் கூடியதாக இருக்கிறது. ஒரு (சுழரனெறழசஅ) என்றவட்டப்புழுவில் உள்ள உயிரணு வளர்ச்சிதை ஈடுபட்ட ஒரு மரபணு மாற்ற அதன் பெற்றோர்கள் விட நீண்ட ஆயுளேடு விவகுக்கும. இயற்கையானது எப்படியோ சில உயிரினங்கள தமது ஆயுளை நீடிக்கும் வழியை கண்டுபிடிக்க உந்துகிறது.

'' லோகாஈ உமது உணரம் என்ன''?

'' ஏன் சேர் திடீரென்று என் உயரததை கேர்கிறர்கள்''?

'' காரணத்தோடு தான்''.

'' ஆறடி மூன்று அங்குலம் சேர் ''.

'' உயரமானவர்கள் நீண்ட காலம் வாழ்வார்கள் என்றும,; செல்கள் சிதைவடைவது குறைவென்றும் எங்கையோ நான் வாசித்தது நினைவிருக்கிறது. அதனால்தான் கேட்டேன். நீங்கள் இருவரும் விடாமுயற்சியாக உங்கள் ஆராய்ச்சியை தொடருங்கள். என் உதவி உங்களுக்கு எப்போதும் இருக்கும்''.

கினி பன்றிகள் (Guinea Pig) மருத்துவ ஆராய்ச்சி பெரிதும் பயன்படுகின்றன? அவை ஆய்வுத் துறைகளில் பயனுள்ள பாலூட்டிகள். அவைக்கும் , மனிதர்களுக்கும் பல உயிரியல் ஒற்றுமைகள் உண்டு. பல நூற்றாண்டுகளாக அவை பரிசோதனைக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன்.'கினி பன்றி ஒரு மனித சோதனை பொருள். கினிப் பன்றிகள், சுமார் 4 முதல் 8 வருடங்கள் வாழக்கூடியவை. வைட்டமின் சி, காசநோய் பாக்டீரியம், இரத்த ஏற்றம், சிறுநீரக நோய், இரத்த உறைதல் போன்ற நோய்களுக்கான மருந்துகளை கண்டுபிடிக்க பாவிக்கப்பட்டன. இக்காரணத்தால்; தங்களின் ஆராய்ச்சிக்கு கினி பன்றியை ஆரம்பத்தில் பாவித்தனர்.

லோகநாதனும் மேரியும் ஆரம்பத்தில்; கினி பன்றியில் செல் சிதைவைப் குறைக்கும் மருந்தைக் கண்டுபிடித்து, பரீட்சித்துப் பார்த்தார்கள். அவ் உயிரினத்தில் செல் சிதைவின் விகிதம் குறைந்ததை கண்டான்கள். ஆதன் காரணமாக கினி பன்றி; 15 வருடங்கள் வரை கூடிய காலம் வாழக்கூடியதாக இருக்கும் என்பது அவர்கள் கணிப்பு. லோகநாதனும், மேரியும் தங்கள் ஆராய்ச்சியின் முடிவைப்பற்றி பேராசிரியர் வில்லியத்துக்கு சொன்னபோது அதற்கு அவர்:>

''எனக்கு இப்போது வயது அறுபது. எனது தோல் சுருங்கத் தொடங்குவதைக் அவதானிக்;கிறேன். அடிக்கடி எனக்கு தடிமன், இருமல், உடம்புவலி போன்றவை வருகிறது. மறதியும் வருகிறது. வெகு தாரம் நடக்க முடியாமல் இருக்கிறது. வெகு காலம்

*நான் வாழ்வனோ தெரியாது, அதனால் நீங்கள் உங்கள் ஆராய்ச்சிக்கு என்னைப் பயன் படுத்தினால் என்ன?" புரொபெசர் கேட்டார்.*

*"என்ன சேர் இப்படிச் புதுமையாக சொல்லுகிறீர்கள். நீங்கள் என்ன கினி பிக்கா (Guinea Pig)"?*

*"அப்படிச் சொல்லவேண்டாம். உடலின் 25 வெவ்வேறு மனித உறுப்புககளை, மாற்று நன்கொடையாக கொடுக்க முடியும். சிறுநீரகம், கல்லீரல், நுரையீரல், கண்கள், ; சிறு குடல் . இரத்த நாளங்கள், எலும்புகள், இருதய வால்வுகள், மற்றும் தோல் இத்தானத்தில் ஆகியவை அடங்கும். அதேபோல் என் உடலை உங்கள் ஆராய்ச்சிக்கு பயன் படுத்த நான் ஒத்துக்கொவதால் மனித இனத்துக்கு சேவை செய்வதாக நான் கருதுகிறேன். ஊடலில் உள்ள மனித உறுப்புகள் தானம் செய்வதில்லையா? அதே போல் எனது முழு உடலையும் உங்கள் ஆராய்ச்சிக்கு நான் தானம் செய்வதாக எடுத்துக்கொள்ளுங்களேன். நான் இன்னும் பத்து வருடம் வாழ்வதாக இருந்தால், எனது ஆயள் காலம் 100 வருடங்களுக்கு மேல் நீடிக்கலாம் அல்லவா?. என்ன இருவரும் சொல்லுகிறீர்கள்"? புரொபெசர் வில்லியம் உறுதியோடு அவர்களைக் கேட்டார்.*

*லோகநாதனாலும் , மேரியாலும் அவர் சொல்வதை நம்பமுடியவில்லை. அவரது வேண்டுகோளை நிராகரிக்கவும் முடியவில்லை.*

*"சேர் எங்களுக்கு சில மாதங்கள் தாருங்கள் எங்கள் முடிவைச் சொல்ல. நாங்கள் தற்போது செய்யும் பரிசோதனைகள் நூறு விகிதம் வெற்றி என்று அறிந்த பின், நாங்கள் கலந்து ஆவோசித்து முடிவெடுத்து, உங்கள் உடலைப் பரிசோதனைக்கு பாவிக்க சம்மதமா இல்லையா என்று சொல்லுகிறோம்", மேரி சொன்னாள்.*

*"சரி ஆறுமாதங்கள் தருகிறேன். நான் ரிட்டையராக இன்னும் 9 மாதங்கள் மட்டுமே இருக்கு. அதற்கு முன் உங்கள் முடிவை சொல்லவேண்டும்" என்றார் புரோபெசர் வில்லியம்.*

*நாட்கள் மாதங்களாயிற்று. புரொபெசர் சொன்ன ஆறு மாதங்ஙகள் முடிய இன்னும் இரு கிழமைகளே இருந்தன. தாங்கள் செய்த ஆயள் நீடிப்பு பரிசோதனைகள் வெற்றி என்பதைக் கண்ட லோகநாதனும் மேரியும், புரொபசரின் வேண்டுகோளுக்கு சம்மதிக்க அவர் வீட்டுக்குப் போய் கதவைத்தட்டினாரகள். அவர்களுக்கு புரொபசர் வில்லியத்தின் மகன் பீட்டர் சொன்ன செய்தி அவர்களை அதிரவைத்தது.*

*"என்ன புரபெசர் வில்லியம் கார் அக்சிடென்டில் இறந்துவிட்h ரா?. எப்போது இது நடந்தது"? லோகநாதன் பீட்டரைக் கேட்டார்.*

*"ஆமாம் நேற்று அப்பா யூனிவர்சிட்டியாலை வீடு திரும்பும் போது ஹைவேயில் ஒரு லொரியோடு அவர் கார் மோதியதால் அவர் அந்த இடத்தலேயே இறந்திட்டார்" அழுதுகொண்டே மகன் பீட்டர் சொன்னார்.*

